Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW 7 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : பன்னீர்செல்வம் |
| Father / Husband Name | : சொக்கலிங்கம் |
| Village | : அருப்புக்கோட்டை |
| Taluk | : அருப்புக்கோட்டை |
| Caste | : |
| Calling | : புரோட்டாக்கடை உரிமையாளர் |
| Religion | : இந்து |
| Age | : 45 |

( எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 09.10.2025.

வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி, பதிவு எண் M.S.No.2563/2015 நீதிமன்றத்தில் இருந்தார். மற்ற

வழக்கறிஞர்களும் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

1. நான் கதவு எண்.7, மலையரசன் கோவில், போரிங் குழாய் தெரு, அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் புளியம்பட்டி ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகில் பன்னீர்செல்வம் என்ற பெயரில் புரோட்டாக்கடை வைத்துள்ளேன். நான் வாடகைக்கு ஹோட்டல் நடத்தி வரும் கட்டிடம் உறவின்முறைக்கு பாத்தியப்பட்டது. என் கடைக்கு எதிரே கதவு எண் 403ல் கனகவள்ளி என்பவர் குடியிருந்து வந்தார். அவருடைய கணவர் பெயர் பாலசுப்பிரமணியம் ஆகும். அவர் கேரளாவில் வேலை செய்து வந்ததாக அறிந்துகொண்டேன்.

2. கனகவள்ளி அவர்கள் கடந்த 31.01.2019 அன்று இறந்துவிட்டதாக மறுநாள் எனக்கு தெரியவந்தது. யாரோ அவரை நகைக்காக கொலை செய்துவிட்டதாக அறிந்துகொண்டேன். கனகவள்ளியின் இறப்பு பற்றி எனக்கு 01.02.2019 அன்று அதிகாலை தான் தெரியவந்தது. 31.01.2019 அன்று இரவு நேரத்தில் கனகவள்ளி இறந்தது பற்றி எனக்கு தெரியாது. அன்றையதினம் நான் அவர் வீட்டிற்கு செல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW 8 |
| | | Defence |
| | | Court |
| Name | : சந்திரன் | |
| Father / Husband Name | : முத்துசாமி | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : கூலி | |
| Religion | : இந்து | |
| Age | : 56 | |

( எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 09.10.2025.

வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி, பதிவு எண் M.S.No.2563/2015 நீதிமன்றத்தில் இருந்தார். மற்ற

வழக்கறிஞர்களும் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

1. நான் கதவு எண் 80/8, மலையரசன் கோவில் தென்வடல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே அமைந்துள்ள ஏசி டிம்பர் மரக்கடையில் கூலி வேலை செய்து வருகிறேன். மரக்கடைக்கு அருகே பாலசுப்பிரமணியம் என்பவரின் வீடு உள்ளது. பாலசுப்பிரமணியம் அவர்களின் மனைவி கனகவள்ளி ஆவார். மேற்சொன்ன கனகவள்ளி அவர்கள் கடந்த 31.01.2019 அன்று இறந்துவிட்டார். அன்றையதினம் மரக்கடை விடுமுறை ஆகும். ஆகையால் நான் வேலைக்கு செல்லவில்லை. மறுநாள் 01.02.2019 அன்று வேலைக்கு சென்றபோது கனகவள்ளியை கம்மல், தோடு மற்றும் தங்க நகைக்காக யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். கனகவள்ளியின் வீட்டிற்கு உள்ளே சென்று நான் பார்க்கவில்லை. வாசலில் நின்று பார்த்தேன். வாசல் பகுதியில் முறத்தில் வத்தல், மல்லி ஆகியவை காயவைக்கப்பட்டிருந்தன.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.